# பட்டயம்

மலர் - 06 செப்டம்பர் - 2010 இதழ் - 11

Date of Issue : 01-09-2010

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 6

Issue : 11 Price Per Copy : Rs.5.00




LORD! GIVE US YOUR GRACE (PSALM 63/3)

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

**191. எவைகளையெல்லாம் புசிக்கலாம்? எவைகளை புசிக்ககூடாது?**

**1.** தேவன் மனிதன் புசிக்கத்தக்கதாக எத்தனையோ உணவுகளைப் படைத்துள்ளார். எனவே புசிக்கத்தகாது என்று சொல்லப்பட்டவை களைப் புசியாம□ருந்தால் நல்லது. பழைய ஏற்பாட்டில் அசுத்தம் என்று சொல்லப்பட்டவைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஒட்டகம் | 2. | குழிமுசல் | 3. | முயல் |
| 4. | பன்றி | 5. | கழுகு | 6. | கருடன் |
| 7. | கடலுராஞ்சி | 8. | பருந்து | 9. | வல்லூறு |
| 10. | காகங்கள் | 11. | தீக்குருவி | 12. | கூகை |
| 13. | செம்புகம் | 14. | டேகை | 15. | ஆந்தை |
| 16. | நீர்க்காகம் | 17. | கோட்டான் | 18. | நாரை |
| 19. | கூழக்கடா | 20. | குருகு | 21. | கொக்கு |
| 22. | ராஜாளி | 23. | புழுக்கொத்தி | 24. | வௌவால் |
| 25. | பெருச்சாளி | 26. | எ □ | 27. | ஆமை |
| 28. | உடும்பு | 29. | அழுங்கு | 30. | ஓணான் |
| 31. | ப ல் □ | 32. | பச்சோந்தி (லேவி 11) | | |

**2.** போதை வஸ்துக்கள் (வெறிகள்) சரீரத்தைக் கெடுப்பவை. எனவே அவைகளை பயன்படுத்துவது பாவம் (கலா 5/21)

**3.** ருசிக்காக அநேக கெமிக்கல்களை சேர்க்கிறார்கள். இவைகள் உடலுக்குக் கெடுதி விளைவிக்கும். அவைகளை பயன்படுத்தக் கூடாது (I கொரி 3/17)

**4.** இரத்தத்தைப் புசிக்கக் கூடாது. (லேவி. 27/26,27)

**5.** நெருங்குண்டு செத்ததைப் புசிக்கக்கூடாது (அப்.15/20)

**6.** விக்கிரகத்துக்குப் படைத்தவைகளைப் புசிக்கக்கூடாது (அப்.15/20)

**7.** கள்ள போஜனத்தைப் புசிக்கக்கூடாது (நீதி 23/1-3)

**8.** கள்ள சகோதரனோடு புசிக்கக்கூடாது (நீதி 23/1-3)

**9.** அளவுக்கு மிஞ்சிப் புசிக்கக்கூடாது (நீதி23/2)

**10.** மாம்சப்பெருந்தீனி பண்ணக்கூடாது. (நீதி 23/20)

**11.** கெட்டுப் போனவைகளைப் புசிக்கக்கூடாது (I கொரி 3/17)

**12.** பல்□விழுந்ததைப் புசிக்கக்கூடாது (லேவி 11/33)

**192. முற்காலத் தண்டனைகள் எவைகள்?**
**(கர்த்தாவே! இவைகளுக்குத் தப்புவியும்)**

**1.** கல் எறிதல் - உபா 17/7

**2.** தீயிற்போடல் - லேவி 21/9

3. தூக்குதல் - எஸ்தர் 7/10
4. கழுவேற்றுதல் - உபா 21/22
5. சிலுவையிலறைதல் - யோ 19/23
6. சிரச்சேதம் - மத் 14/10
7. சிகரத்திருந்து தள்ளிவிடல் - II நாளா 25/12
8. வாளால் அரிதல் - எபி 11/37
9. சவுக்கடி - உபா 25/3
10. தடியாலடி - அப். 16/22
11. வாரடி (வாரின் அந்தத்தில் ஈய குண்டுகள் உண்டு) - யோ 19/1
12. தொழுமரத்தில் மாட்டுதல் - அப் 16/24
13. ரோமம் பிய்த்தல் - நெகே 13/25
14. கண்ணைப் பிடுங்கல் - நியா 16/21
15. விரல்களைத் தரித்தல் - நியா 1/6
16. முள்களால், குறடால் வாதித்தல் - நியா 8/16
17. சிறையில் போடல் - அப் 16/24

**193. ஆசாபின் சங்கீதம் என்றால் என்ன? (ஆசாபைப் போலாக்கும்)**

1. இவன் லேவியின் சந்ததியான் (I நாளா 6/39)
2. இவன் ஒரு பாடகன் (I நாளா 15/17)
3. இவன் ஒரு தீர்க்கதரிசி (I நாளா 25/2)
4. இவன் ஞானதிருஷ்டிக்காரன் (II நாளா 29/30)
5. இவன் புத்திரர் பாடகர்களாய் இருந்தார்கள் (எஸ்றா 2/41)
6. இவன் சங்கீதம் 50, சங்கீதம் 73-83 ஆக்கியோன்

**194. ஆரோகண சங்கீதம் என்றால் என்ன?**

1. இது யாத்திரை சங்கீதங்களாகும்
2. சங்கீதம் 120 - 134 வரை
3. தாவீது பாடிய ஆரோகண சங்கீதம் 122, 124, 131, 133
4. சாலமோன் பாடின ஆரோகண சங்கீதம் 127
5. மொத்தம் 15. 1 படிக்கு 1 சங்கீதம் என்பார்கள்.
6. இது யாத்திரை சங்கீதங்கள் (PSALM OF ASCENTS)

**195. சபையின் ஊழியர் எப்படி காணப்பட வேண்டும்?**

1. கர்த்தருக்குப் பிரதிஷ்டையாகத் தன்னைக் கொடுக்க வேண்டும். - ரோமர் 12/1

2. கர்த்தருக்குப் பரிசுத்தமாய் தன்னை அர்ப்பணிக்க வேண்டும் - யாத் 28/36
3. போஜனபலி செலுத்த வேண்டும். சத்திய வசனத்தைப் போஜனமாக ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டும். - லேவி 6/20
4. இராப்போஜனம் கொடுக்க வேண்டும் - லேவி 4/17; லேவி 16
5. ஊழியத்திற்காக அபிஷேகம் செய்யப்பட வேண்டும் - யாத். 29
6. ஸ்தோத்திரபலி, விண்ணப்ப பலி, துதி பலி, ஆராதனை பலிகளை செலுத்த வேண்டும் - லேவி 1-6
7. வியாதியுள்ளவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் - லேவி 13, 14
8. பூரிகைகளை ஊத வேண்டும் (துதிபலி செலுத்த வேண்டும்) - எண். 10/10
9. தசமபாகம் (எண்.18/26), முதற்பலன்கள் (எண்.18/12); காணிக்கைகள் (எண்.18/29) அங்கீகரிக்கப்பட ஜெபிக்க வேண்டும்.
10. ஆரோனைப் போல அழைக்கப்பட்டிருக்க வேண்டும். தானாகத் தன்னை நியமிக்கக் கூடாது - எபிரேயர் 5/4

**196. புதிய ஏற்பாட்டில் பிரதான ஆசாரியன் யார்?**

1. புதிய ஏற்பாட்டின்படி இயேசுவே நம் பிரதான ஆசாரியர் , அவரே மகா ஆசாரியர் (எபி 10/21)
2. இயேசுவே இரட்சிப்பின் அதிபதி (எபி 3/10)
3. இயேசு உபத்திரவங்களால் பூரணப்பட்டார் (எபி 3/10)
4. இயேசுவே பரிசுத்தம் செய்கிறவர் (எபி 2/11)
5. இயேசு மாம்சமும் இரத்தமும் உடையவராய் வந்தார் (எபி 2/14)
6. அவரே இரக்கமும் உண்மையும் உள்ள பிரதான ஆசாரியர் (எபி 2/17)
7. அவர் சோதிக்கப்பட்டுப் பாடுபட்ட பிரதான ஆசாரியர் (எபி 2/18)
8. சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்ல பிரதான ஆசாரியர் இயேசுவே (எபி 2/18)
9. இவர் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ள பிரதான ஆசாரியர் (எபி 3/3)
10. இவர் தேவனுடைய வீட்டை உண்டு பண்ணிய பிரதான ஆசாரியர் (எபி 3/3)
11. வானங்களின் வழியாய் பரலோகத்திற்கு போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகாபிரதான ஆசாரியர் நமக்குண்டு. (எபி 4/14)

12. பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடிய பிரதான ஆசாரியர் இயேசு (எபி 4/14)
13. அவர் எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்ட பிரதான ஆசாரியர் இயேசு (எபி 4/15)
14. பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியர் இயேசு (எபி 4/15)
15. அவர் மெல்கிசெதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் பிரதான ஆசாரியராயிருக்கிறார். (எபி 5/6)
16. தசமபாகம் பெற்றுக் கொள்ளப்பாத்திரராய் இருப்பவர் இயேசு (எபி 7/2,4)
17. நம்மை ஆசீர்வதிப்பவர் இயேசு (எபி 7/6)
18. அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானவர் இயேசு (எபி 7/17)
19. ஆணையின்படி ஆசாரியராக்கப்பட்டவர் இயேசு (எபி 7/20)
20. மாறிப்போகா ஆசாரியத்துவம் உடையவர் இயேசு (எபி 7/24)
21. வேண்டுதல் செய்யும் பிரதான ஆசாரியர் இயேசு (எபி 7/25)
22. எப்பொழுதும் உயிரோடிருக்கும் பிரதான ஆசாரியர் இயேசு (எபி 7/25)
23. பரிசுத்தர், குற்றமற்றவர், மாசில்லாதவர், பாவிகளுக்கு விலகினவர், வானங்களிலும் உயர்ந்தவர் இயேசு (எபி 7/26)
24. தம்மைத்தாமே ஒரேதரம் பலியிட்ட பிரதான ஆசாரியர் இயேசு (எபி 7/27)
25. என்றைக்கும் பூரணரான குமாரன் இயேசு (எபி 7/28)
26. மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலிருப்பவர் இயேசு (எபி 9/1)
27. பரிசுத்த ஸ்தலத்தில் மெய்யான கூடாரத்தில் இருப்பவர் இயேசு (எபி 9/2)
28. சொந்த இரத்தத்தினால் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து நித்திய மீட்பை உண்டுபண்ணியவர் இயேசு (எபி 9/12)
29. கிறிஸ்து பழுதற்ற பலியாக தம்மைத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார். (எபி 9/14)
30. அவர் புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தர் (எபி 9/15)

**197. புதிய ஏற்பாட்டின்படி ஆசாரியக்கூட்டம் எது? (I பேது 2/5; வெளி 1/6)**

1. கர்த்தரிடம் சேர வேண்டும் - I பேதுரு 2/4

**2.** ஜீவனுள்ள கற்களைப் போலாக வேண்டும். கர்த்தரின் ஜீவனால் நிரப்பப்பட வேண்டும் - I பேதுரு 2/5

**3.** ஆவிக்கேற்ற மாளிகையாக வேண்டும் - I பேதுரு 2/5

**4.** பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் - I பேதுரு 1/15

**5.** ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்த வேண்டும் - I பேதுரு 2/5

**6.** தேவனுக்குப் பிரியமான பலிகளைச் செலுத்த வேண்டும் - I பேதுரு 2/5

**7.** ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் - ரோமர் 12/1

**198. புதிய ஏற்பாட்டின்படி ராஜாக்கள் யார்? (வெளி 1/6)**

**1.** நம் ஆண்டவர் ராஜாதி ராஜாவாகயிருக்கிறார். திறவுகோல் அதிகாரங்களால் செயல்படுகிற பிள்ளைகள் ராஜாக்களாக இருக்கிறார்கள் - (வெளி 1/6; 19/16)

**2.** 8 திறவுகோல்கள் உண்டு. இவைகளைக் கொண்டு பூட்ட வேண்டும், திறக்க வேண்டும், கட்ட வேண்டும், கட்டவிழ்க்க வேண்டும், விழுங்க வேண்டும் - மத் 16/19

**3.** இருப்புக்கோல் அதிகாரம் பெற்று துன்மார்க்கர் மேல் வெற்றி பெற வேண்டும் - வெளி 2/27

**4.** விடிவெள்ளி நட்சத்திர அதிகாரம் பெற்று சாத்தான் மேல் வெற்றி பெற வேண்டும் - வெளி 2/28

**5.** கர்த்தரின் ஆளுகையை பூமியில் ஜெபித்து ஸ்தாபிக்கும் பரிசுத்த வான்களாக, ராஜாக்களாக நாம் மாற வேண்டும் - தானி 9/27

**199. ஆதாமின் பாவத்தால் உலகத்தில் வந்தவை எவைகள்?**

**1.** பாவம் - ரோமர் 5/12

**2.** சாத்தானின் தொல்லை - ஆதி 3/15

**3.** மரணம் - ரோமர் 5/17

**4.** சாபங்கள் - ஆதி 3/17

**5.** அற்பமான சரீரம் - பிலிப்பியர் 3/21

**6.** வியாதிகள் - பிலி 2/27

**7.** பாடுபட்டு புசித்தல் - ஆதி 3/19

**8.** முட்கள் - ஆதி 3/18

**9.** கர்ப்பவேதனை - ஆதி 3/16

**10.** வெட்கம் - ஆதி 2/25

**200. பாதாளம் என்பதற்கும் நரகத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

1. பாதாளம் என்பது மரித்த துன்மார்க்கர்களின் ஆத்துமாக்கள் செல்லும் இடம் - லூக். 16/23
2. அது புறம்பான இருள் என்னப்படும். அங்கு வெளிச்சம் இல்லை - மத் 22/13
3. அங்கு புழு, பூச்சி உண்டு - மாற்கு 9/48
4. அங்கு தண்ணீர் இல்லை - லூக்கா 16/24
5. அங்கு மிகுந்த வெப்பம் உண்டு - லூக்கா 16/24
6. அங்கு நாற்றம் உண்டு - ஏசாயா 14/19
7. அங்கு அழுகையும் பற்கடிப்பும் உண்டு - மத் 23/13
8. அசுத்த ஆவிகளையும் கர்த்தர் அங்கே தள்ளுவார் - லூக்கா 8/31
9. இப்பாதாளத்தின் திறவுகோல் கர்த்தரின் கையிலுள்ளது-வெளி 1/18
10. கல்யாண வஸ்திரம் தரியாதவன் இங்கே தள்ளப்படுவான்-லூக் 22/12
11. பாதாளத்தில் ரூபம் அழிக்கப்படும் - சங்கீதம் 49/14
12. பாதாளத்தில் ஒரு தூதன் உண்டு. அவன் பெயர் பாதாளத்தின் தூதன் (அபெத்தோன், அப்பொல்லியோன்) - வெளி 9/11
13. பாதாளத்தில் வெட்டுக்கிளிகள் உண்டு. அவைகள் பண்ணும் வேதனை தேள்கடிக்கு ஒப்பானவை - வெளி 9/5
14. இரட்சிக்கப்பட்டவர்கள் ஆத்துமா பாதாளத்தில் தள்ளப்படுவதில்லை - சங் 49/15

**201. அக்கினிக் கடல் எது?**

1. இது அக்கினியும் கந்தகமும் எரிகின்ற கடலாகும் - வெளி 20/10
2. இதிலே தள்ளப்படுபவைகள்
    1. மிருகம் - வெளி 20/10
    2. கள்ளத்தீர்க்கதரிசி - வெளி 20/10
    3. பிசாசு - மத் 25/41
    4. பிசாசைச் சேர்ந்த தூதர்கள் - மத் 25/41
    5. மரண வாதைகள் - வெளி 20/14
    6. பாதாள வாதைகள் - வெளி 20/14
    7. பயப்படுவோர் (பிசாசுக்கு) - வெளி 21/8
    8. அவிசுவாசிகள் - வெளி 21/8
    9. அருவருப்பானவர்கள் - வெளி 21/8
    10. கொலைபாதகர் - வெளி 21/8

11. விபசாரக்காரர் - வெளி 21/8

12. சூனியக்காரர் - வெளி 21/8

13. விக்கிரக ஆராதனைக்காரர் - வெளி 21/8

14. பொய்யர் - வெளி 21/8

15. ஜீவபுஸ்தகத்தில் பெயர் இல்லாதோர் - வெளி 20/15

3. இங்கே இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் - வெளி 20/10

4. ஆத்துமாவும் சரீரமும் வாதிக்கப்படும் - மத் 10/28

5. இங்கே அக்கினி அவியாது - மாற்கு 9/48

## 202. காவலுள்ள ஆவிகள் என்பவைகள் எவை?

நோவா காலத்தில் அவன் பேழையை ஆயத்தம் பண்ணும் போது 120 வருடங்கள் நீதியைப் பிரசங்கித்தான். அவனோடு 8 பேர் மாத்திரம் மனந்திரும்பினார்கள். காக்கப்பட்டார்கள். மற்றவர்கள் பெரு வெள்ளத்தில் அழிந்து போனார்கள். இவர்கள் கீழ்படியாதவர்கள். இவர்களின் ஆவிகள் காவலில் வைக்கப்பட்டது என்று பைபிள் சொல்கிறது.

ஆண்டவர் பெரிய வெள்ளியன்று மாம்சத்தில் கொலையுண்டார். ஆனால் ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய் காவலில் உள்ள இந்த ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று எழுதப்பட்டுள்ளது. அவர் பாதாளம் போனதாக வசனம் சொல்லவில்லை. (ஆதி. 6/3 ; Iபேதுரு. 3/19 ; IIபேதுரு 2/5)

## 203. ஆத்துமாவைக் குறித்து பைபிள் சொல்வது என்ன?

1. ஆத்துமாவை படைப்பவர் ஆண்டவர் - ஆதி. 2/7
2. ஆவியைப் படைப்பவர் ஆண்டவர் - பிரசங்கி 12/7
3. சரீரத்தைப் படைப்பவர் ஆண்டவர் - சங்கீதம் 139/12,13
4. மனிதனுக்கு மட்டுமே ஆத்துமா உண்டு - ஆதி 2/7
5. படைக்கப்பட்ட ஆத்துமா விசேஷமானது. அது நித்திய ஜீவனை அடையலாம் அல்லது நித்திய அழிவை அடையலாம். - மத் 10/28
6. ஆத்துமாவும் கடவுளும் சமமல்ல. ஆத்துமா ஆண்டவரின் படைப்பேயாகும் - எசே. 18/4
7. ஆத்துமா தானிருந்த சரீரத்தை விட்டு இன்னொரு சரீரத்திற்குள் செல்லாது - லூக் 16/22
8. நல்ல ஆத்துமா மரித்தப்பின்னர் பரதீஸ் அடைந்திடும் ; அங்கே இளைப்பாறும் - லூக் 23/43

9. பொல்லாத ஆத்துமா மரித்தப்பின்னர் பாதாளம் அடைந்திடும்; வேதனைப்படும் - லூக் 16/23
10. ஆத்துமா வேறு; அசுத்த ஆவிகள் வேறு - மத் 12/43
11. ஆத்துமா சரீரத்தின் ஒரு அங்கம் அல்ல - I தெச 5/23
12. ஆத்துமாவை இயேசுவின் இரத்தம் கழுவ முடியும் - லேவி 17/11
13. ஆத்துமாவை ஆவியானவர் கழுவ முடியும் - I பேதுரு 1/1
14. ஆத்துமாவை ஆண்டவரின் திருவசனம் கழுவ முடியும்-I பேதுரு 1/23
15. சரீரவியாதிகள் ஆத்துமாவைப் பிடிக்க முடியாது - I தெச 5/23
16. ஆத்துமா உணவினால் பலம் பெற முடியாது - மத். 4/4
17. ஆத்துமாவுக்கு உணவு ஆண்டவரின் வசனம் - சங் 19/7
18. முட்டைகள் குஞ்சாக மாறுவது போல மரித்தப் பின்னர் ஆத்துமா இன்னொரு நிலையில் நிற்க முடியும் - மத் 17/3
19. சரீரத்தில் உள்ள காயங்களோ, முறிவுகளோ ஆத்துமாவைக் காயப்படுத்த முடியாது - I தெச 5/23
20. பாவத்தால் ஆத்துமா அழுக்காகின்றது - எபேசி 5/27
21. ஆத்துமா ஈடேற விசுவாசிக்க வேண்டும் - எபிரேயர் 10/39
22. மனிதனுக்கு ஒரு பிறப்பு மட்டுமே உண்டு; 7 பிறப்புகள் கிடையாது - எபி 9/27
23. இருக்கிறவராகவே இருக்கிற கடவுளால் மனித ஆத்துமா படைக்கப்படுகிறது - யாத் 3/14
24. நன்மை தீமைக்கேற்ற பலன் நிச்சயமாய் ஆத்துமாவுக்கு மறுமையில் உண்டு - வெளி 22/12

**204. ஆபிரகாமை அழைத்த கடவுள் எப்படிப்பட்டவராக தம்மை வெளிப்படுத்தினார்?**

1. மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமானார் - அப். 7/1
2. தேவன் பேசுகின்ற தேவனாக வெளிப்பட்டார் - அப் 7/3
3. வாக்குத்தத்தம் பண்ணுகிற தேவனாய் இருந்தார் - அப் 7/5
4. பின்வரும் காரியங்களை அறிவிக்கிற தேவனாய் வெளிப்பட்டார் - ஆதி 7/6
5. ஆராதனையை விரும்பும் தேவனாய் வெளிப்பட்டார் - அப் 7/7
6. வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும் தேவனாய் வெளிப்பட்டார் - ஆதி. 21/2

7. உருவாக்கும் தேவனாய் வெளிப்பட்டார் - ரோமர் 4/19
8. நரபலியை விரும்பாத தேவன் என்பதை வெளிப்படுத்தினார் - ஆதி 22/13
9. ராஜாதி ராஜாவாய் வெளிப்பட்டார் - ஆதி 14
10. ஆசீர்வதிப்பவராய் வெளிப்பட்டார் - ஆதி 14/19
11. அழிக்கின்ற தேவனாய் வெளிப்பட்டார் - ஆதி 19/24
12. பாதுகாக்கிற தேவனாய் வெளிப்பட்டார் - ஆதி 19/29
13. நினைக்கின்ற தேவனாய் வெளிப்பட்டார் - ஆதி 19/29
14. ஜெபத்தைக் கேட்கிற தேவனாய் வெளிப்பட்டார் - ஆதி 18/32
15. கர்ப்பங்களை அடைக்கிறவராய் வெளிப்பட்டார் - ஆதி 20/17
16. கர்ப்பங்களை திறப்பவராய் வெளிப்பட்டார் - ஆதி 20/18
17. செய்கிற எல்லாவற்றிலும் கூட இருப்பவராய் வெளிப்பட்டார் - ஆதி 21/22
18. சகல காரியங்களிலும் ஆசீர்வதிப்பவராய் வெளிப்பட்டார் - ஆதி 29/1
19. அக்கிரமங்களைக் கண்டிக்கிற தேவனாய் வெளிப்பட்டார்-ஆதி15/16
20. சர்வ வல்லமையுள்ள தேவனாய் வெளிப்பட்டார் - ஆதி 17/1
21. உடன்படிக்கை பண்ணச் சொன்ன தேவனாய் வெளிப்பட்டார் - ஆதி 17/11
22. உடன்படிக்கை பண்ணின தேவனாய் வெளிப்பட்டார் - ஆதி 17/4

**205. மேன்மையான பலி ஆபேல் செலுத்தினான் ஏன்?**

1. ஆபேல் நன்மை செய்பவனாய் இருந்தான் - ஆதி 4/7
2. மந்தையின் தலையீற்றைக் கொண்டு வந்தான். முதற்பங்கைக் கொடுத்தான் - ஆதி 4/4
3. தலையீற்றில் கொழுமையானதைக் கொண்டு வந்தான் - ஆதி 4/4
4. இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்ற பிரமாணம் ஆதாமுக்கு ஏதேன் தோட்டத்தில் கற்பிக்கப்பட்டது. அதை ஆபேல் நடப்பித்தான் - எபி. 9/22 ; ஆதி 3/21
5. ஆபேல் விசுவாசத்தோடு பலி செலுத்தினான் - எபி 11/4
6. ஆபேல் தன் குறைகளை தேவ சமுகத்தில் நினைத்துப் பார்த்தான். தன் குறைகளை அறிக்கை பண்ணினான். பரிசுத்தரிடம் பரிசுத்தம் பெற்றுக் கொள்ள வாஞ்சித்தான் - ஆதி. 4/4
7. ஆபேல் பக்தி நிறைந்தவனாய் இருந்தான் - எபி 11/4

## 206. 'ஆமென்' என்றால் என்ன?

1. ஆமென் என்னப்பட்டவர் என்று வெளி 3/14 சொல்கிறது. எனவே அது ஆண்டவரின் ஒரு நாமம் - வெளி 3/14
2. ஆமென் என்ற வார்த்தை தொழுவதற்காக பயன்படுத்தப்படும் வார்த்தை - வெளி 19/4
3. ஆமென் என்ற வார்த்தை ஜெபத்தை இரண்டு முறை சொல்வதற்கென்று பயன்படுத்தும் வார்த்தை - வெளி 22/21
4. ஆமென் என்கின்ற வார்த்தை எல்லா வாக்குத்தத்தங்களையும் நம்மேல் இறக்கும் வார்த்தை - II கொரி 1/20

## 207. எப்படி தேவனை ஆராதிக்க வேண்டும்?

1. வணக்கம் செய்தல் (கும்பிடல்) - ஏசாயா 6/2
2. ஸ்தோத்திரம் பண்ணுதல் - மத் 23/39
3. ஓசன்னா சொல்லுதல் - மத் 21/15
4. ஆமென் சொல்லி தொழுதல் - வெளி 19/4
5. அல்லேலூயா சொல்லி தொழுதல் - வெளி 19/4
6. வணக்கமாய் விழுதல் - வெளி 19/4
7. கைத்தாளத்தோடு துதித்தல் - சங் 150/5
8. மத்தாளத்தோடு துதித்தல் - சங் 150/3
9. இசைக்கருவிகளால் துதித்தல் - சங் 150/3
10. ஆகாயத்தைப் பார்த்துத் துதித்தல் - சங் 150/1
11. பாலகர்கள் துதித்தல் - மத் 21/16
12. சிறுவர் நடனமாடித் துதித்தல் - சங் 150/4
13. சாட்சிகளால் துதித்தல் - நீதி 14/25
14. கர்த்தரைக் கொண்டாடுதல் - சங் 148/14
15. பாடல்களால் துதித்தல் - சங் 96/1
16. புதுப்பாடல்களைப் பாடுதல் - சங் 149/1
17. கர்த்தரில் களிகூருதல் - சங் 149/2
18. வேதவசனங்களை வாசித்தல் - நெகேமியா 8/1-3
19. வசனங்களை தியானித்தல் - நெகேமியா 8/1-3
20. விசுவாச வார்த்தைகளைச் சொல்லுதல் - எபி 6/11
21. விசுவாசத்தை அறிக்கை பண்ணுதல்- ரோமர் 10/10
22. பாவ அறிக்கை செய்தல் - 1 யோ 1/9

23. பாவ மன்னிப்பு பெறுதல் - 1 யோ 1/9
24. ஒருமனப்படுதல் - சங் 133
25. ஒருமித்து ஜெபித்தல் - மத் 18/20
26. ஒருமித்து புகழுதல் - சங் 100/1
27. தனி ஜெபம் - எரே 33/3
28. நண்பர்கள் கூடி ஜெபம் - மத் 17/1
29. ஸ்திரீகள் ஜெபம் - அப் 16/13
30. புருஷர்கள் ஜெபம் - I தீ 2/8
31. சிறுபிள்ளைகளுக்காக ஜெபம் - மத் 19/13-15
32. புருஷர் கைகளை உயர்த்தி ஜெபித்தல் - I தீ 2/8
33. ஆலயத்திற்காக ஜெபம் - எரேமியா 50
34. விசுவாசிகளுக்காக ஜெபம் - கலா 6/2
35. ஊழியங்களுக்காக ஜெபம் - அப் 4/30
36. தேசத்திற்காக ஜெபம் - I தீ 2/1, 2
37. தேசங்களுக்காக ஜெபம் - I தீ 2/4
38. பின்மாரிக்காக ஜெபம் - சகரி 10/1
39. சாத்தானைக் கட்டி ஜெபம் - மத் 12/29
40. எழுப்புதலுக்காக ஜெபம் - ஏசா 35
41. காணிக்கைகளை அங்கீகரிக்க ஜெபம் - I நாளா 29/10-21
42. ஆசீர்வாத ஜெபம் - சங் 128
43. ஆரோன் ஜெபம் - எண் 6/22-26
44. யாபேஸ் ஜெபம் - I நாளா 4/10
45. கர்த்தரின் ஜெபம் - யோவான் 17
46. மோசேயின் ஜெபம் - யாத் 15/1-19
47. ஞானஸ்நானம் - யோ 3/3
48. இராப்போஜனம் - யோ 6/53,54
49. கால் கழுவுதல் - யோ 13/14
50. முக்காடிடுதல் - 1 கொரி 11/15,16
51. காணிக்கை செலுத்துதல் - மல்கியா 1/11
52. ஒருவரையொருவர் வாழ்த்துதல் - லூக் 1/40,41
53. கட்டி ஜெபித்தல் - மத் 18/18
54. கட்டவிழ்த்து ஜெபித்தல் - மத் 18/18

55. ஆவியானவரால் ஜெபித்தல் - 1 கொ 14/15
56. ஆவியானவரால் பாடுதல் - 1 கொ. 14/15
57. ஆவிக்குள்ளாகுதல் - வெளி 1/10
58. மகிழ்ச்சியோடு ஆராதித்தல் - சங் 100/2
59. வாசல்களில் துதியோடு பிரவேசித்தல் - சங் 100/4
60. சாஷ்டாங்கமாய் விழுதல் - மத் 2/11
61. கண்களை மூடுதல் - ஏசாயா 6/2
62. முழங்காடுதல் - ஏசாயா 6/2
63. பாதரட்சைகளை கழற்றுதல் - யாத் 3/5
64. ஏழைகளுக்கு இரங்குதல் - நீதி 19/17
65. விடுதலை ஜெபம் - லூக் 6/37
66. அற்புத நேரம் - 1 கொரி 12/10
67. ஆறுதல் நேரம் - ஏசா 40/1
68. ஆர்ப்பரித்தல் - யோசுவா 6/20
69. ஆரவார முழக்கம் - யோசுவா 6/20
70. குருத்தோலை ஆராதனை - யோ 12/13-15
71. வெண்வஸ்திரத்தோடு துதித்தல் - வெளி 7/9
72. பவனி ஆராதனை - மத் 21/7-12
73. வெற்றிக் கொடி ஆராதனை - சங் 20/5
74. ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை -
75. வாக்குத்தத்த சுதந்தரிப்பு ஜெபம் - எபி 6/11
76. பொருத்தனை பண்ணும் நேரம் - சங் 50/14,15
77. பலிகள் செலுத்தும் நேரம் - 1 பேது 2/5

**208. கிறிஸ்துவின் காலம் எது?**

**1. அகஸ்துராயன் காலம் (கி.மு. 31 - கி.பி.14)**

இவன் காலத்தில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட கட்டளை பிறந்தது. அதன் அடிப்படையில் யோசேப்பு தாவீது வம்சத்தானாயிருந்த படியால் நாசரேத்திலிருந்து பெத்லகேமுக்கு (தாவீதின் ஊருக்கு) போனான் (லூக்.2/1-5)

**2. மகா ஏரோது காலம் (கி.மு. 37 - கி.பி.4 வரை)**

இவன் காலத்தில் யூதேயாவில் உள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். இவன் பெத்லகேமில் உள்ள 2 வயதுக்குட்பட்ட ஆண்பிள்ளை

களை கொலை செய்தான். இவன் தேவாலயத்தைப் புதுப்பித்தான். இயேசு எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டார் (மத் 2/1, 15)

**3. அர்கெலேயு காலம் (கி.மு. 4 - கி.பி.6 வரை)**

இவன் காலத்தில் இயேசு எகிப்திருந்து கலிலேயாவுக்குத் திரும்பி வந்தார். நாசரேத்தில் வாசம் பண்ணினார். (மத் 2/22, 23)

**4. ஏரோது அந்திப்பா காலம் (கி.மு. 4 முதல் - கி.பி.39 வரை)**

இவன் கலிலேயாவுக்கு அதிபதியாய் இருந்தான். யோவான் ஸ்நானகன் ஊழிய நாட்களில் இருந்தவன். ஏரோதியாளால் ஏவப்பட்டு அவனைக் கொன்றவன். இவனை கர்த்தர் 'நரி' என்றார். இவன் கர்த்தரை பரியாசம் பண்ணினவன்.

**5. பிலாத்துவின் காலம் (கி.மு. 26 - கி.பி.36)**

இவன் யூதேயாவுக்கு அதிபதியாய் இருந்தான். கர்த்தரை விடுவிக்க முயற்சி செய்தான். முடிவில் கையைக் கழுவினான். இவன் காலத்தில் திபேரியு இராயன் இராஜாவாயிருந்தான்.

**209. அப்போஸ்தலரின் காலம் எது?**

**1. காய்பாவின் காலம்**

**2. ஏரோது அகிரிப்பா I காலம் (கி.பி. 37 - 44 வரை)**

யோவானின் சகோதரன் யாக்கோபை கொன்றவன் (அப் 12/1). பேதுருவை சிறையில் வைத்தவன் (அப்.12/3,4). இவன் புழுபுழுத்து செத்தான் (அப்.12/23)

**3. கிலவுதி இராயன் காலம் (கி.பி. 41 - 54)**

இவன் காலத்தில் பஞ்சம் வந்தது (அப் 11/28), இவன் யூதர்களை ரோமாபுரியிருந்து போகக் கட்டளை பிறப்பித்தான். அதினால் ஆக்கில்லா, பிரிஸ்கில்லா போக வேண்டி வந்தது (அப் 18/2)

**4. நீரோ இராயன் காலம் (கி.பி. 54 - கி.பி.68)**

பிறிட்டானிக்கஸ் என்பவனை நஞ்சு கொடுத்து கொன்றவன். ரோமாபுரிக்கு நெருப்பு வைத்தவன். பவுல், இராயருக்கு அபயமிடுகிறேன் என்று சொன்னவன் இவனே. (அப் 25/11; 2 தீமோ 4/17)

**5. அகிரிப்பா II காலம் (கி.பி. 56 - 100)**

பவுல் இவனுக்கு முன்பாக நின்றான். தானும் கிறிஸ்தவனாகலாம் என்று பரியாசம் பண்ணினான். (அப்.26/28)

**6. ஆலோசனை சங்க காலம் :**

**1.** யூதர்கள் சிறையிருப்பிருந்து வந்த காலத்தில் ஏற்பட்டது.

**2.** நியாயத் தீர்ப்புக்காக ஏற்பட்டது.

**3.** இச்சங்கத்தின் அதிகாரம் இயேசுவின் காலத்தில் யூதேயாவில் மாத்திரம் இருந்தது. எனவே அவர் யூதேயாவுக்கு வந்த போது விரோதமாக செயல்பட்டது. மரண ஆக்கினைக்குத் தீர்க்கப்பட்ட குற்றவாளியைக் கொல்ல ரோம அதிகாரிகளின் உத்தரவு பெற வேண்டும். (யோ.18/31)

**4.** ஆலோசனை சங்கத்தில் நிறுத்தப்பட்டவர்கள்

a) இயேசு - லூக் 22/66

b) பேதுரு, யோவான் - அப் 4/15

c) ஸ்தேவான் - அப் 6/12

d) பவுல் - அப் 22/30

**211. பரிசுத்தாவிக்கு விரோதமான ஆவிகள் எவைகள்?**

**1.** அசுத்த ஆவிகள் - மத் 10/1

**2.** வஞ்சக ஆவி - I யோ 4/6

**3.** ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவி - எபி 2/2

**4.** அடிமைத்தனத்தின் ஆவி - ரோ 8/15

**5.** மிருகத்தின் ஆவி (அந்திகிறிஸ்துவின் ஆவி) - வெளி 16/13

**6.** கள்ளதீர்க்கதரிசன ஆவி - வெளி 16/13

**7.** வலுசர்ப்பத்தின் ஆவி (வியதான்) - வெளி 16/13

**8.** சமுத்திர வலுசர்ப்ப ஆவி - ஏசா 27/1

**9.** பாதாளக் கட்டு ஆவி - சங் 18/5

**10.** மரணக்கட்டு ஆவி - சங் 18/4

**11.** உலக சிநேக ஆவி - யாக் 4/4

**12.** இச்சையின் ஆவி - யாக் 4/1

**13.** மேட்டிமையின் ஆவி - I யோ 2/16

**14.** குறிசொல்லும் ஆவி - அப் 16/16

**15.** வஞ்சிக்கிற ஆவிகள் - I யோ 4/6

**16.** ஒளியின் தூதன் வேஷ ஆவிகள் - II கொரி 11/14

**17.** தூதர் வேஷ ஆவிகள் - கலா 1/8

**18.** லேகியோன் ஆவிகள் - மாற்கு 5/9

**19.** பில்லுனிய ஆவிகள் - கலா 5/20

20. கள்ளப் போதக ஆவி - II பேதுரு 2/1
21. கள்ளகிறிஸ்து ஆவி - II பேதுரு 2/1
22. கள்ள சகோதர ஆவி - II பேதுரு 2/1
23. பாழாக்கும் அருவருப்பின் ஆவிகள் - மத் 24/15
24. மகாபாபிலோன் ஆவிகள் - எரேமி 51/1
25. தீக்கடக்கம் கேட்கும் ஆவிகள் - உபா 18/10
26. நாள்பார்த்தல் சம்பந்த ஆவிகள் - உபா 18/10
27. நட்சத்திரம் பார்த்தல் சம்பந்த ஆவிகள் - ஏசாயா 47/13
28. அமாவாசி கணிக்கிறவர்கள் சம்பந்த ஆவிகள் - ஏசா 47/13
29. ஜோசியம் சம்பந்த ஆவிகள் - ஏசா 47/13
30. அஞ்சனம் பார்த்தல் சம்பந்த ஆவிகள் - உபா 18/10
31. செத்தவர்களிடம் குறிகேட்டல் சம்பந்த ஆவிகள் - உபா 18/11
32. மாயவித்தைக்காரன் சம்பந்த ஆவிகள் - உபா 18/11
33. சன்னதக்காரன் சம்பந்த ஆவிகள் - உபா 18/11
34. மந்திரவாதம் சம்பந்த ஆவிகள் - உபா 18/11
35. விக்கிரக ஆவிகள் - ஏசா 2/18
36. சொரூப ஆவிகள் - வெளி 13/15
37. பாவராஜ்யம் சம்பந்த ஆவிகள் - தானி 2/38-40
38. எண்சம்பந்த ஆவிகள் (Numerology) - வெளி 13/18
39. படிகம் சம்பந்த ஆவிகள் (Crystology) - எரே 10/2
40. எழுத்து சம்பந்த அசுத்த ஆவிகள் - எரே 10/2
41. பொய்யின் ஆவிகள் - I இரா 22/22, 23
42. பொய்யான அற்புதங்களின் ஆவிகள் - வெளி 16/13,14

**212. பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் எப்படி காணப்பட வேண்டும்?**

1. பரிசுத்த ஆவியானவர் உதவியால் கருத்தோடு ஜெபிக்க வேண்டும் - I கொரி 14/15
2. பரிசுத்த ஆவியானவர் உதவியால் ஆவியால் அந்நிய பாஷைகளால் ஜெபிக்க வேண்டும் - I கொரி 14/15
3. ஆவியானவர் உதவியால் கருத்தோடு பாட வேண்டும் - I கொரி 14/15
4. ஆவியானவர் உதவியால் ஆவியால் அந்நியபாஷைகளால் பாட வேண்டும் - I கொரி 14/15

5. ஆவியானவர் உதவியால் ஆவியின் வரங்களைச் செயல்படுத்த வேண்டும். - I கொரி 14/1

6. ஆவியின் கனிகள் உள்ளவர்களாகக் காணப்பட வேண்டும் (அன்பு, சந்தோஷம், சமாதானம், சாந்தம், இச்சையடக்கம், விசுவாசம், நற்குணம், தயவு) - கலா 5/22,23

7. தேவ அன்பு, சகோதர அன்பு, உள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். - ரோமர் 5/5 ; - I யோ 3/14

8. தேவ ஆவியானவர் பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தும் போது அவைகளை உடனே விட்டு விட வேண்டும். - யோ 16/8

9. தேவ ஆவியானவர் நடத்துதலுக்கு ஒத்துப்போக வேண்டும் - ரோமர் 8/27

10. தேவசித்தத்தின்படி ஆவியானவர் உதவியால் செயல்பட வேண்டும். - ரோமர் 8/27

11. ஆவிக்குள்ளாக வேண்டும். - வெளி 1/10

12. கிறிஸ்துவுக்குள்ளாக வேண்டும். - II கொரி 12/1

13. ஆவிக்கேற்ற மாளிகையாக வேண்டும். - I பேதுரு 2/5

14. ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்த வேண்டும். - I பேதுரு 2/5

15. ஆவிக்குரிய விவேகம் உள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். - கொலோ 1/9

16. ஆவிக்குரிய ஞானபோஜனத்தைப் புசிக்க வேண்டும் (வசனம், இராப்போஜனம்) - எரே 15/16

17. ஆவிக்குரிய ஞானபானத்தைப் பருக வேண்டும் (இராப்போஜனம்) - I கொரி 10/4

18. மேலானவைகளையே நாட வேண்டும். - கொலோ 3/2

**213. உடன்படிக்கைப் பெட்டி எங்கே போனது?**

உடன்படிக்கை பெட்டி என்பதே

a) கர்த்தரின் பெட்டி

b) யெகோவாவின் பெட்டி

c) கடவுளின் பெட்டி

d) சாட்சிப் பெட்டி

e) பரிசுத்த பெட்டி

இது மரத்தால் செய்யப்பட்டு பசும்பொன்தகட்டால் மூடப்பட்டது. சுமப்பதற்கேதுவாய் வளையம், தண்டு உண்டு. நீளம் சுமார்

4 அடி அகலமும், உயரமும் 2¼ அடி. அதில் கற்பலகைகள், ஆரோனின் கோல், மன்னா வைக்கப்பட்டது. இது சீலோவில் இருந்தது. ஓபேத் ஏதோம் வீட்டிருந்தது. சாலமோன் ஆலயத்திலும் இருந்தது. பெட்டியின் மேல் கிருபாசனமிருந்தது. எனவே பெட்டியானது தேவபிரசன்னத்துக்கு ஒப்பாயிருந்தது.

கி.மு. 586ல் பாபிலோன் ராஜாவின் நெபுசராதான் என்ற காவல் சேனாதிபதி ஆலயம், அரண்மனை எருசலேமின் சகல கட்டடங் களையும் அக்கினியால் சுட்டெரித்தான்.

தேவபிரசன்னம் உடன்படிக்கைப் பெட்டியிருந்ததால் அதை ஒன்றும் செய்ய முடியாது. அது தூதர்களால் பரலோகம் கொண்டு போகப்பட்டதாக இருக்கலாம். வெளி 11/19ல் பரலோகத்தில் தேவாலயத்தில் உடன்படிக்கைப் பெட்டி இருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

செருபாபேலும் ஏரோதும் கட்டின ஆலயங்களில் உடன்படிக்கை பெட்டி வைக்கப்பட்டதாகச் சொல்லப்படவில்லை. உடன்படிக்கைப் பெட்டி வல்லமை, ஆரோன்கோல் வல்லமை, வசனங்களின் வல்லமைகளை கர்த்தர் அனுப்ப ஜெபி.

**214. உத்தரிக்கிற ஸ்தலம் உண்டா? (PURGATORY)**

கத்தோலிக்கர் உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று விசுவாசிக்கிறார்கள். மரித்த விசுவாசிகள் நல்லவர்களாக இருந்தாலும் ஆண்டவரைக் காணும் முன் உத்தரிக்கிற ஸ்தலத்தில் காத்திருக்க வேண்டும் என்றும் உத்தரிக்கிற ஸ்தலத்தில் அவர்கள் உலக பாவங்களுக்காக வேதனைகளைச் சகிக்க வேண்டுமென்றும் பூமியிலுள்ளோர் பண்ணும் ஜெபதப தானதர்மங்களைப் பார்த்து கர்த்தர் வேதனைகளைக் குறைப்பார் என்றும் சொல்வார்கள். இந்த உபதேசம் தவறு.

இன்று என்னோடு பரதீஸில் இருப்பாய் என்று கர்த்தர் கள்ளனைப் பார்த்துச் சொன்னார் (லூக்.23/43). பவுல் தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவோடே இருக்க எனக்கு ஆசையுண்டு என்றான் (பி 1/23).

கிறிஸ்து எனக்கு ஜீவன் என்றும் சாவு எனக்கு ஆதாயம் என்றான். நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுவார்கள். (ஏசா.57/2)

# புதியவெப்ஸைட்

I 1. **VISIT OUR NEW WEBSITE**

(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. **WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org**

(இணையதள முகவரி : www.hosannahchurch.org)

3. **FEATURES INSIDE (உள்ளே)**

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா □ ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வா□பர் பகுதி □ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் □ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் □ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS (அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

---

## பெண்கள் எழுப்புதல் ஜெபம்

## "ÏQNô-Vô] v§ÃûVd Lió ©¥lTYu Vôo? AYÞûPV ®ûX ØjÕdLû[l Tôod¡Ûm EVokRÕ'' - ¿§. 31/10

---

---

**அதற்குப் பின் மதிய உணவு வழங்கப்படும்.**

**நம் இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்க கடந்து வருமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.**